**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**
முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M., P.G.D in J.J & J.P
நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு
2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 03–ம் நாள் புதன்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், வைகாசி மாதம் 20–ம் நாள்)
**CNR.No.TNED040067172025**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1380/2025**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஈரோடு வடக்கு காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண்.362/2022 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

1) ஐயப்பன் (வயது 60/2026),
த/பெ. கிருஷ்ணசாமி லேட்,
2, தென்றல் நகர் 6 வது வீதி,
ராசம்பாளையம் ரோடு,
பெரியசேமூர்,
ஈரோடு.

2) ஆசைதம்பி (வயது 34/2026),
த/பெ. பாஸ்கர் லேட்,
2, காவேரி ரோடு,
வீரப்பன்சத்திரம்,
ஈரோடு.

3) செந்தில் (எ) செந்தில்குமார் (வயது 51/2026),
த/பெ. ராஜாமணி,
14/1, மரப்பாலம் ரோடு,
5, KAS நகர், கருங்கல்பாளையம்,
ஈரோடு. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 30.07.2022 |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 30.07.2022 |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:34:31 +0530

| | | | |
|---|---|---|---|
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | A1, A2-30.07.2022<br>A3-08.08.2022 | A1, A2 – 02.08.2022<br>A3- 02.09.2022 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 04.11.2025 | |
| 5. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்ட நாள் | 04.03.2026 | |
| 6. | BNSS பிரிவு 355-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | 1) 1 மற்றும் 2 எதிரிகள் தாக்கல் செய்த C.M.P.No.9165/2022-ல் கு.வி.மு.ச பிரிவு 437-ன் கீழான மனு கடந்த 02.08.2022-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>2) 3-ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.9595/2022-ல் கு.வி.மு.ச பிரிவு 437-ன் கீழான மனு கடந்த 11.08.2022-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>3) 1 மற்றும் 2 எதிரிகள் தாக்கல் செய்த C.M.P.No.10113/2022-ல் கு.வி.மு.ச பிரிவு 437(2)-ன் கீழான நிபந்தனை தளர்வு மனு கடந்த 18.08.2022-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>4) 3-ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.11435/2022-ல் கு.வி.மு.ச பிரிவு 437(2)-ன் கீழான நிபந்தனை தளர்வு மனு கடந்த 19.09.2022-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>5) 1 மற்றும் 2 எதிரிகள் தாக்கல் செய்த C.M.P.No.11650/2022-ல் கு.வி.மு.ச பிரிவு 437-ன் கீழான நிபந்தனை தளர்வு மனு கடந்த 23.09.2022-ம் தேதி | |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:34:36 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>6) அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட M.P.No.1/2026–ல் மனு கடந்த 07.05.2026–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. | | |
| 7. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 27.04.2026 | இல்லை |
| | | அ.சா.2 | 07.05.2026 | 07.05.2026 |
| 8. | எதிரியிடம் குற்றம் குறித்து BNSS பிரிவு 351(1)(பி)–ன் கீழ் வினவிய நாள் | 11.05.2026 | | |
| 9. | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | -- | -- | |
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 11.05.2026 | | |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 03.06.2026 | | |

இவ்வழக்கானது கடந்த 04.11.2025–ம் தேதி, C.C.No.1380/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.விஸ்வநாதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

## –தீர்ப்புரை–

இந்த வழக்கு BNSS 193(2) இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.



VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:34:40 +0530

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

கடந்த 30.07.2022-ம் தேதி, காலை 09.00 மணிக்கு, ஈரோடு நசியனூர் ரோடு, கைகாட்டிவலசு பஸ் ஸ்டாப் அருகில் 1 மற்றும் 2 எதிரிகள் இருவரும் 3-ம் எதிரியிடம் வெள்ளை துண்டு பேப்பரில் எழுதி சீட்டுகளை விற்பனைக்காக வைத்திருந்துள்ளார்கள். 3-ம் எதிரி வெள்ளை துண்டு பேப்பரில் சீட்டுகளை அவரே எழுதி விற்பனை செய்யச் சொல்லி 1 மற்றும் 2 எதிரிகளிடம் கொடுத்துள்ளார். எனவே 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மூன்று பேரும் வெள்ளை துண்டு பேப்பரில் போலியாக அவர்களே எழுதி சீட்டுகளை விற்பனை செய்து வந்துள்ள குற்றத்திற்காக 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 420 IPC மற்றும் 5 r/w 7(3) TNLR Act-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக ஈரோடு வடக்கு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 420 IPC மற்றும் 5 r/w 7(3) TNLR Act-ன் படியான குற்றத்தை விசாரணைக்கு எடுத்து BNSS 210 (1) (b) ன் படி உத்தரவிடப்பட்டு 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSS-ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு 1 முதல் 3 வரையிலான எதிரிகளிடம் அரசுதரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வினவியபோது 1 முதல் 3 வரையிலான எதிரிகள் குற்றத்தை மறுத்துள்ளார்கள். ஆவணங்களை ஆராய்ந்ததன்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:34:45 +0530

அடிப்படையில் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் இந்நீதிமன்றம் விசாரிக்கக்கூடிய குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என அனுமானம் செய்ய போதிய காரணங்கள் இருந்ததால், BNSS பிரிவு 263(1)–ன் படி 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 420 IPC மற்றும் 5 r/w 7(3) TNLR Act–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றச் சாட்டினை மறுத்த காரணத்தினால் BNSS பிரிவு 265–ன் படி அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 10 சாட்சிகளில், 2 சாட்சிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.20 வரையிலான சான்றுபொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

6. கடந்த 30.07.2022–ம் தேதி, 09.00 மணிக்கு, அ.சா.1 திரு.தெய்வமணி நிலையம் ஆஜராகிக் கொடுத்த அ.சா.ஆ.2 எழுத்து மூலமான புகாரை தலைமை காவலர் சாட்சி–9 திரு.நவனீதகிருஷ்ணன் பெற்று நிலைய குற்ற எண்.362/2022, சட்டபிரிவுகள் 420 இதச, 5 r/w 7(3) LR Act ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலையும் அசல் புகாரையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் சாட்சி–10 திரு.லிங்கசாமி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

(ii) பின்னர் சாட்சி–10 உதவி ஆய்வாளர் திரு.லிங்கசாமி வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் சாட்சி–4 திரு.சுப்பிரமணி, சாட்சி–3 திரு.ஹரிஹரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தும், சாட்சிகள் அ.சா.1



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:34:49 +0530

திரு.தெய்வமணி, சாட்சி–2 திரு.கோகுல்ராஜ், சாட்சி–3 திரு.ஹரிஹரன், சாட்சி–4 திரு.சுப்பிரமணி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடியபோது, 30.07.2022–ம் தேதி, 12.45 மணிக்கு, கன்னிராவுத்தர் பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த எதிரிகளை தகவலாளி அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரிக்க தங்களது பெயர் ஐயப்பன் மற்றும் ஆசைத்தம்பி என்று பெயர் கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவர்களை சாட்சிகள் சாட்சி–5 திரு.மோகன், சாட்சி–6 திரு.விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, எதிரி ஐயப்பன் எடுத்து ஆஜர் செய்த வெள்ளை பேப்பரில் பேனாவால் எழுதப்பட்ட அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.20 வரையிலான வின்வின் 456371 முதல் 456390 வரையிலான 20 துண்டு சீட்டுகளை தனது சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த லாட்டரி சீட்டுகளை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி, சாட்சி கையொப்பம் பெற்றும், பின் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.7 படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், பின்னிட்டு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மூன்றாவது எதிரியை தேடிய போது 08.08.2022–ம் தேதி, வீரப்பன்சத்திரம் பஸ் நிலையத்தில் நின்று இருந்தவரை தகவலாளி அடையாளம் காட்ட பிடித்து விசாரித்து தனது பெயர் செந்தில் என்று கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவு 420 இதச, 5 r/w 7(3) LR Act–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதியை விளக்கி BNSS 351 (1) (பி)–ன் கீழ் வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:34:55 +0530

தெரிவித்துள்ளார்கள். எனவே 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படாததால் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**<u>இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:–</u>**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 420 IPC மற்றும் 5 r/w 7(3) TNLR Act–ன் கீழான குற்றங்கள் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**<u>தீர்வு:–</u>**

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார் என்றும், மேலும் அரசுதரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், எனவே அரசுதரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. அரசுதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதத்தில் அ.சா.1 பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளபோதும், இந்த வழக்கில் புலன்விசாரணை குறித்து அ.சா.2 அரசுதரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதால் எதிரிகள் மீதான குற்றங்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

11. அ.சா.1 இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் என்பதும், அ.சா.2 தற்போதைய ஈரோடு வடக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் என்பதும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலிக்கும் போது தெரியவருகிறது.



VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:35:00 +0530

12. அ.சா.1 திரு.தெய்வமணியிடம் ராசம்பாளையத்தை சேர்ந்த ஐயப்பன் மற்றும் வீரப்பன்சத்திரத்தை சேர்ந்த ஆசைதம்பி ஆகிய இருவரும் அடிக்கடி வந்து தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்து வருவதாகவும் அதில் எல்லோருக்கும் பரிசு விழுவதாலும் அ.சா.1–யையும் வாங்குமாறு கேட்டு ஆசைவார்த்தை கூறியதாகவும், அ.சா.1 முதலில் வேண்டாம் என சொன்னதாகவும், அடிக்கடி அ.சா.1–யை கேட்டுக்கொண்டதன் பேரில் ஐயப்பன் மற்றும் ஆசைதம்பி என்பவர்களிடம் லாட்டரி சீட்டுகள் வாங்கியதாகவும், லாட்டரி சீட்டு வாங்கும் போது ஒரு துண்டு வெள்ளை பேபரில் சீட்டின் பெயரையும், எண்களையும் எழுதிக்கொடுப்பார் என்றும், மறுநாள் சென்று பரிசு விழுந்ததா என்று கேட்டால் பரிசு விழவில்லை என்று சொல்லுவார்கள் என்றும், அ.சா.1 அவர்களிடம் பலமுறை லாட்டரி சீட்டு வாங்கியும் பரிசு விழவில்லை என்றும், 30.07.2022–ம் தேதி, காலை 08.00 மணிக்கு, கைக்காட்டி வலசு பஸ் ஸ்டாப் அருகே அ.சா.1 நடந்து சென்ற போது அங்கு இருந்த ஐயப்பனும், ஆசைதம்பியும் அ.சா.1–யிடம் லாட்டரி சீட்டு வாங்குமாறு கேட்டார்கள் என்றும், உடனே அ.சா.1 பலமுறை உன்னிடம் லாட்டரி சீட்டு வாங்கியும் பரிசு விழவில்லை, நீங்கள் பொய்யான எண்களை எழுதி கொடுத்து என்னைப்போல் பலரையும் ஏமாற்றி வருகிறீர்கள், அதனால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கிறேன் என்று சொன்னவுடன் இருவரும் கருங்கல்பாளைத்தை சேர்ந்த கேபிள் செந்தில் என்பவரிடம் தாங்கள் வாங்கி விற்பனை செய்கிறோம் என்று கூறி விட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், அ.சா.1 உடனே ஈரோடு வடக்கு காவல் நிலையம் வந்து பரிசு விழும் என ஆசைவார்ததை கூறி பொதுமக்களை ஏமாற்றி தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்துவந்துள்ளதாக அ.சா.1 திரு.தெய்வமணி அ.சா.ஆ.2–ன் படி புகார் அளித்ததன் அடிப்படையில் எதிரிகள் மீது அ.சா.ஆ.3–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

13. மேற்படி வழக்கு சம்பவம் குறித்து இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திரு.தெய்வமணி தன்னுடைய முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகளை தனக்கு



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:35:04 +0530

தெரியாது என்றும், வழக்கு குறித்து தனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையொப்பம் – அ.சா.ஆ.1 தன்னுடையது தான் என்றும், ஆனால் அதில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்ததாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று கூறி அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படாதது அரசுதரப்பு வழக்கில் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேற்படி இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையிலும், மற்ற சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாத நிலையிலும், தற்போது எஞ்சி இருப்பது இந்த வழக்கின் புலன் ஆய்வு அலுவலருக்கு பதிலாக சாட்சியம் அளித்த தற்போதைய ஈரோடு வடக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளரான அ.சா.2–ன் சாட்சியம் மட்டுமே ஆகும். அ.சா.2 மூலமாக அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.20 வரையிலான சான்றுபொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகளிடமிருந்து அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.20 வரையிலான துண்டு லாட்டரி சீட்டுகள் கைப்பற்றப்பட்டதை தகுந்த சாட்சிகள் மூலம் அரசுதரப்பு நிரூபணம் செய்யவில்லை. அ.சா.1 திரு.தெய்வமணி அளித்த அ.சா.ஆ.2 புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.2–ன் சாட்சியம் அமைந்துள்ளதேயன்றி எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யக்கூடிய வகையில் அவரது சாட்சியம் அமைந்திருக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.2–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக முடிவுக்கு வர இயலாது என்றே



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:35:08 +0530

இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. இறுதியாக, மேலே ஆராய்ந்த வகையில் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலனை 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு வழங்கி, 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 420 இதச மற்றும் 5 r/w 7(3) TNLR Act–ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1 முதல் 3 வரையிலான எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1)–ன் படி 1 முதல் 3 வரையிலான எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

16. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் பிணையில் இருந்ததால் 1 முதல் 3 வரையிலான எதிரிகளும், பிணையதாரர்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்து செய்யப்படுகின்றது.

17. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பி.ஆர்.எண்.655/2025–ல் உள்ள அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.20 வரையிலான Win Win No. 456371 to 456390 துண்டு சீட்டுகளை மேல்முறையீடு காலத்திற்கு பின்னிட்டு சட்டநடைமுறைகளை பின்பற்றி அகற்றம் செய்ய வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 03–ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:35:13 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு

**<u>இணைப்பு</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

| **வரிசை எண்.** | **அரசுதரப்பு சாட்சி எண்.** | **பெயர்** | **விவரிப்பு** |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.தெய்வமணி | நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் |
| 2. | அ.சா.2 | திரு.கண்ணன் | விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| **வரிசை எண்.** | **அரசு தரப்பு சான்றாவணம் எண்.** | **குறியீடு செய்யப்பட்ட தேதி** | **குறியீடு செய்யப்பட்ட ஆவணம்** | **யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது/ சான்றொப்பம் இடப்பட்டது** |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 27.04.2026 | புகாரிலுள்ள அ.சா.1–ன் கையெழுத்து | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 07.05.2026 | புகார் | அ.சா.2 |
| 3. | அ.சா.ஆ.3 | 07.05.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| 4. | அ.சா.ஆ.4 | 07.05.2026 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| 5. | அ.சா.ஆ.5 | 07.05.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |
| 6. | அ.சா.ஆ.6 | 07.05.2026 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.2 |
| 7. | அ.சா.ஆ.7 | 07.05.2026 | படிவம் 91 | அ.சா.2 |

**எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : ஏதுமில்லை.**

**அரசு தரப்புச் சான்று பொருள் : (பி.ஆர்.எண். 655/2025)**

| **வரிசை எண்.** | **அரசு தரப்பு சான்றுபொருள் எண்.** | **குறியீடு செய்யப்பட்ட தேதி** | **குறியீடு செய்யப்பட்ட சான்றுபொருள்** | **யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது/சான்றொப்பம் இடப்பட்டது** |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.பொ.1 | 07.05.2026 | Win Win No. 456371 | அ.சா.2 |
| 2. | அ.சா.பொ.2 | 07.05.2026 | Win Win No. 456372 | அ.சா.2 |
| 3. | அ.சா.பொ.3 | 07.05.2026 | Win Win No. 456373 | அ.சா.2 |
| 4. | அ.சா.பொ.4 | 07.05.2026 | Win Win No. 456374 | அ.சா.2 |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:35:18 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | அ.சா.பொ.5 | 07.05.2026 | Win Win No. 456375 | அ.சா.2 |
| 6. | அ.சா.பொ.6 | 07.05.2026 | Win Win No. 456376 | அ.சா.2 |
| 7. | அ.சா.பொ.7 | 07.05.2026 | Win Win No. 456377 | அ.சா.2 |
| 8. | அ.சா.பொ.8 | 07.05.2026 | Win Win No. 456378 | அ.சா.2 |
| 9. | அ.சா.பொ.9 | 07.05.2026 | Win Win No. 456379 | அ.சா.2 |
| 10. | அ.சா.பொ.10 | 07.05.2026 | Win Win No. 456380 | அ.சா.2 |
| 11. | அ.சா.பொ.11 | 07.05.2026 | Win Win No. 456381 | அ.சா.2 |
| 12. | அ.சா.பொ.12 | 07.05.2026 | Win Win No. 456382 | அ.சா.2 |
| 13. | அ.சா.பொ.13 | 07.05.2026 | Win Win No. 456383 | அ.சா.2 |
| 14. | அ.சா.பொ.14 | 07.05.2026 | Win Win No. 456384 | அ.சா.2 |
| 15. | அ.சா.பொ.15 | 07.05.2026 | Win Win No. 456385 | அ.சா.2 |
| 16. | அ.சா.பொ.16 | 07.05.2026 | Win Win No. 456386 | அ.சா.2 |
| 17. | அ.சா.பொ.17 | 07.05.2026 | Win Win No. 456387 | அ.சா.2 |
| 18. | அ.சா.பொ.18 | 07.05.2026 | Win Win No. 456388 | அ.சா.2 |
| 19. | அ.சா.பொ.19 | 07.05.2026 | Win Win No. 456389 | அ.சா.2 |
| 20. | அ.சா.பொ.20 | 07.05.2026 | Win Win No. 456390 | அ.சா.2 |

**குறிப்பு :**

1. 1 முதல் 3 வரையிலான எதிரிகள் பிணையில் உள்ளார்கள்.
2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.03 17:35:22 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு